REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 24உ சனி (10—12—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 25உ ஞாயிறு (11—12—55) [இதழ் 153

இந்தியப் பேரரசின் நிர்வாக இலட்சணம்

புதுடில்லி டிச. 8—

இந்த ஆண்டு மே 1-ம் தேதி முதல் அக்டோபர் 31-ம் தேதி வரையுள்ள காலத்தில் மொத்தம் 184 தடவைகளுக்கு 165 தடவைகள் சென்னைக்கும்—டில்லிக்குமிடையே ஓடும் 'கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்' இரயில் காலம் கடந்த வந்து சேர்ந்தது. அதே காலத்தில், அதே வண்டி, டில்லியிலிருந்து சென்னைக்குச் சேரு

(4-ம் பக்கம் பார்க்க)

பிரி - கிழக்கு ஆப்பிரிக்காவில் குஜராத்தியர் கோட்டம்!

வர்த்தகம் முழுவதும் அவர்கள் வசம்தானும்!

தூதுவர் கோபால மேனன் தரும் தகவல்

சென்னை—

"கிழக்கு ஆப்பிரிக்காவில் உள்ள கென்யா, தங்கநியாகா, உகாண்தா, ஜான்ஜிபார் ஆகிய நான்கு வட்டங்களிலும் இந்திய மக்கள் தொகை சுமார் 2,35,000 ஆகும். இவர்களில் பெரும்பான்மையினர் மகா குஜராத்தியரும், சீக்கியர்களும் ஆவர்.

"இந்தியர்களில் பெரும்பான்மையினர் வர்த்தகர்களே யாவர்.

"கென்யா சர்க்கார் வேலைகளில் சில இந்தியர்கள் இருக்கின்றனர். இவர்கள் நடுத்தர, கீழ்த்தர உத்தியோகங்களே வகிக்கின்றனர். உயர்தர நிர்வாகப் பதவிகளில் ஒருசிலர் மட்டுமே இருக்கின்றனர்—அதாவது முப்பதாண்டுகளுக்கு முன் இந்தியாவில் எப்படி இருந்தனரோ, அப்படித்தான் இருக்கின்றனர்.

"கிழக்கு ஆப்பிரிக்காவில் எல்லா நாடுகளிலும், இந்தியர்கள் வளமிக்க வகுப்பினராகவே இருக்கின்றனர். அந்த நாடுகளின் வர்த்தகம் உண்மையில் அவர்கள் வசமே உள்ளது,"

—என்று, பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்தியத் தூதுவராயிருக்கும் எம். கோபால மேனன் அண்மையில் சென்னையில் தங்கியிருக்கும்போது தகவல் தந்திருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"பூகோள, மற்றும் சரித்திர காரணங்களினால் இந்தியா, ஆப்பிரிக்காவின் முன்னேற்றத்தில் கவனம் கொண்டிருக்கிறது.

"இந்தியா—ஆப்பிரிக்காக் கண்டங்களை இந்து மகா சமுத்திரம்

(4-ம் பக்கம் பார்க்க)

ரஷ்ய இரும்புக்கு பதிலாக இந்தியப் பஞ்சு!

வதந்தியைக் கேட்டு பருத்தி விலையைக் கூட்டிய இலாபவேட்டையர்!

புதுடில்லி, டிச. 9—

பஞ்சுப் பொதி ஒன்று ரூ. 703-க்கு விற்கப்பட்டு வந்தது. திடீரெனக் காலையில் ரூ 7-ம், மாலையில் ரூ 23-மும் அவ்விலை மீது கூடிவிட்டது. பம்பாய் வியாபாரிகளின் இலாபக் கொள்ளையாகும் இது!

இந்த விலையேற்றத்திற்கு ஒரே ஒரு காரணம்தான் கூறப்படுகிறது அதாவது, இந்தியப் பேரரசிற்கும் — ரஷ்ய அரசாங்கத்திற்கும் புதுடில்லியில் நடைபெற்று வரும் வியாபாரப் பேச்சில், ரஷ்ய இரும்புக்குப் பதிலாக 3 இலட்சம் பொதி இந்தியப் பஞ்சு அனுப்ப வேண்டும் எனப் பேசப்பட்டதாகக் கிளம்பியுள்ள வதந்தியேயாகும்.

இதை ஒரு புகலாகக்கொண்டு தருணத்திற்குக் காத்துக்கிடக்கும் பம்பாய் பருத்தி வியாபாரிகள். பஞ்சு விலையை கிடீடத்திற்கு கிடீடம் உயர்த்திவிடத் தொடங்கி விட்டனர்

இதை மறுத்து இருக்கிறது—இந்திய அரசாங்கத்தின் வியாபாரத் துறை. 'ஏற்படுத்தப்படும் வியாபார ஒப்பந்தத்தில் பருத்தி கண்டிப்பாக இடம் பெறாது' என அரசாங்க வியாபாரத் துறை அறிவித்து இருக்கிறது.

'சட்டமறுப்பு இயக்கம் ஆரம்பிப்போம்'

கிழக்கு வங்க சர்க்காருக்கு அவாமி லீக் தலைவர் எச்சரிக்கை

டாக்கா, டிச. 8—

"21 அம்சங்கள் கொண்ட திட்டத்தை, கிழக்கு வங்கத்தில் ஐக்கிய முன்னணி சர்க்கார் அமுல் செய்யாவிட்டால் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பதைத் தவிர வேறு வழியில்லை; மக்களின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும் இந்தத் திட்டத்திற்காக உயிர்த் தியாகம் செய்யவும் நான் தயங்கமாட்டேன்; மக்களும் அது போன்றே தயாராக உள்ளனர்,"

என்று, கிழக்குப் பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் மௌலானா அப்துல் அமீத்கான் பஷானி இங்கு நடைபெற்றதோர் பிரம்மாண்டமான கூட்டத்தில் எச்சரித்துள்ளார்.

தனிப் பகுதியாகவே இருக்குமாம்

புதுவை மாநிலம் ஒரு தனிப் பகுதியாகவே இருக்குமென்றும், புதுவை மக்களைக் கலந்தாலோசிக்காமல் அரசியலமைப்பில் எவ்வித மாறுதலும் செய்யப்படாதென்றும் ஏற்கனவே இந்திய சர்க்கார் உறுதியளித்திருக்கின்றனர் என்றும், ஆனால், சட்டப்பூர்வமான மாறுதல் ஏற்படும் வரையில், புதுவை சட்ட சபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுப்பது சாத்தியப்படாது என்றும், திருமதி லட்சுமி மேனன் ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

'குழு அறிக்கையால் குழப்பம் விளைந்தது'

காலங் கடந்தபின், முன்னாள் மத்திய அமைச்சர் கூறும் கருத்து

"ஒரு பலம் வாய்ந்த மத்திய ஆட்சியுடன், இந்தியாவில் மொத்தம் ஐந்து மாநிலங்கள்தான் இருக்க வேண்டும்—அதாவது, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்திய மாநிலங்கள்—என்றுதான் இருக்கவேண்டும்; அத்தகைய ஒரு அமைப்பில், மாகாண சட்ட சபைகள், மந்திரி சபைகள்கூட அவசியமாக இராது,"

என்று, முன்னாள் மத்திய சர்க்கார் அமைச்சர் வி. வி. கிரி அவர்கள் கூறியுள்ளார்.

"மாநிலப் புனரமைப்புக் குழுவின் அறிக்கை மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

சென்னையில் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், ரூ 50 இலட்சம் செலவில், சென்னை, கல்கத்தா, பாட்னா, ஐதராபாத் ஆகிய நான்கு இடங்களிலும் 4 புற்றுநோய் ஆராய்ச்சி மத்தியக் கழகங்களை நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்

'ஒப்பந்தப் புள்ளி பெருது தான்தோன்றித்தனமாக நடந்துள்ளன'

'ஒதுக்கப்பட்ட பணம் வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது'

'செலவழித்தத் தொகைகளுக்குச் சரியான ஏடுகள் இல்லை'

மாவட்டக் கழகங்களின் நடைமுறைக் கோளாறு!

"ஐந்து மாவட்டக் கழகங்களின் கணக்குகள் திருப்திகரமாக இருக்கவில்லை; இரண்டின் கணக்குகள்தான் திருப்திகரமாயிருந்தன; ஆறு மாவட்டங்களில், 'பரவாயில்லை' என்ற நிலைதான் இருக்கிறது.

"பன்னிரண்டு மாவட்டக் கழகங்களின் நிர்வாகம், 'பரவாயில்லை,' அல்லது, 'திருப்திகரமாயிருக்கின்றன' என்றுகூறும் நிலைதான் இருக்கிறது; ஒரு மாவட்டக் கழகத்தின் நிலை அறவே திருப்திகரமாயிருக்கவில்லை,"

—என்று, ஆந்திர மாநிலம் அமைந்த பிறகு, சென்னை மாநிலத்தில் உள்ள மாவட்டக் கழகங்களின் 1952—53-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை கூறுகிறது.

"10 மாவட்டக் கழகங்களின் நிதி நிலை சரியாக இருக்கவில்லை மூன்றின் நிலைதான் பொதுவில் திருப்திகரமாயிருக்கிறது.

"வட ஆற்காடு, செங்கற்பட்டு, தென்கன்னட மாவட்டங்களில், குறிப்பிட்ட இனத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகைகள், இதர சாதாரண செலவுகளுக்காகக் கையாளப்பட்டிருக்கின்றன.

"வரவு - செலவுத் திட்டம், இனவாரி ஒதுக்கல், தொகைகளை இனம் மாற்றல் முதலியவற்றிற்கான விதிகளை நான்கு மாவட்டக் கழகங்கள் கடைப்பிடிக்கவில்லை.

"சுமார் ரூ. 90,554 வரை, கால நிர்ணயம் காரணமாக, வரிகள் வகையில் வசூலிக்கப்படாது போய்விட்டன. அவைகளை வசூலிக்க எத்தவிதமான கடும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

"ஒன்பது மாவட்டக் கழகங்களில் ரூ. 1,37,544 வரை உள்ள தொகைக்கு, பணம் கொடுத்ததற்கான ரசீதுகள் தணிக்கையின் போது காண்பிக்கப்படவில்லை.

"பணம் பெற்றுக்கொண்டவர், சர்க்கார் கஜானா இவர்களின் ரசீதுகள் ரூ. 1,22,025 வரையுள்ள தொகைகளுக்குக் காண்பிக்கப்படவில்லை.

"தணிக்கையின்போது ரூ. 624-10-0 மோசடி செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது"

இவை எல்லாம், மாவட்டக் கழக நிர்வாகம் பற்றிய அறிக்கையில் காணக்கிடக்கும் ஊழல்களாகும்.

'நான் அடிப்பதுபோல அடிக்கிறேன்; நீ அழுவதுபோல அழு!'

பஞ்சாப் காங்கிரஸ் போக்கு

அமிர்தசரஸ்—

'மகா பஞ்சாப் முன்னணியின் தலைவரான டாக்டர் காளிசரண் சர்மா என்பவரை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலக்கிவைப்பது,'

என்று, பஞ்சாப் பிரதேச காங்கிரஸ் செயற்குழு முடிவு செய்திருக்கிறது.

மாநிலப் புனரமைப்புக் குழு அறிக்கையை ஒட்டி, மகா பஞ்சாப்—பஞ்சாப் சுபா தகராறுகளில் அவரது நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரும் தாகீது ஒன்றின் மீதே செயற்குழுவினர் இந்த முடிவை மேற்கொண்டிருக்கின்றனர்.

விஜயநகரம் ராஜா - ராணி கைது!

விவசாயிகளுக்கு நிலம் பெற போராட்டத்தில் ஈடுபட்டனர்!

கர்நூல், டிச. 9—

விஜயநகரம் ராஜா - ராணி இருவரும், சோஷலிஸ்டுகள் என்ற முறையில் கிளர்ச்சியில் ஈடுபடும்போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆந்திர சோஷலிஸ்டு கட்சித் தலைவரான பி. வி. ஜி ராஜு (ராஜா), குஜீம் கஜபதி ராஜு (ராணி) ஆகிய இருவரும், வேறு இரு எம்.எல் ஏ-க்கள் உட்பட 16 பேர்களுடன் மாசெர்லாவிலிருந்து, நாகார்ஜுனசாகர் அணைக்கட்டுப் பகுதிக்கு விவசாயிகள் ஊர்வலம் ஒன்றை நடத்திச் செல்கையில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

'சர்க்காருக்குச் சொந்தமான தரிசு நிலங்களை ஏழை விவசாயிகளுக்கு இனாமாகப் பிரித்து வழங்க வேண்டும்,' என்று கோரி, பிரதமர் நேரு நாகார்ஜுனசாகர் அணைக் கட்டிற்குக் கால்கோள் விழா நடத்த வரும்போது அவரிடம் மனு ஒன்று தந்து ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அந்த சோஷலிஸ்டு தலைவர் தெரிவித்திருந்தார்.

அதை ஒட்டியே, பிரதமர் நேரு கலந்துகொள்ளும் விழாவில் குறுக்கு ஏதும் இருந்துவிடாது என்பதற்காக, அந்த 16 பேர்களும் முன்பே போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 10—12—'55 சனி

அட்லி விலகல்

சிறந்த மக்களாட்சி முறைக்குத் தாயகமாக விளங்கிவரும் இங்கிலாந்தின் தொழிற்கட்சித் தலைவராக இருந்துவந்த கிளமெண்ட் ரிச்சார்ட் அட்லி, அக்கட்சியின் தலைமைப் பதவியைத் துறந்துவிட்டார். இன்றைக்குத் தமது எழுபத்திரண்டாம் ஆண்டை முடிக்கும் நிலையில் அவர் இருக்கிறார்.

சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன்னர், தொழிற்கட்சித் தலைவர்களிடையே குழப்பமும், கொந்தளிப்பும், உட்பகையும் உச்சத்தில் இருந்த நிலையில், அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் அட்லி. குழப்பத்தைச் சீர்செய்து, கொந்தளிப்பை ஒடுக்கி, உட்பகையைக் கருவறுத்து, கட்சியைக் கட்டி வளர்க்கும் அறிவு, ஆற்றலும் அவர் ஒருவருக்கே உண்டு என்ற எண்ணத்தில் தான், அவருடைய கூட்டுத் தோழர்கள், தலைமைப் பதவியை ஏற்கும்படி அட்லியை வற்புறுத்தினர். அவருடைய அறிவு நுட்பத்திலும், செயல் திறத்திலும் அவருடைய கூட்டுத் தோழர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் போக்கிலேயே, உடைந்து கிடந்தத் தொழிற்கட்சியை உருவாக்கி, மீண்டும் பாராளும் பக்குவத்தைத் தேடித் தந்திருக்கிறார் அட்லி எனக் கூறுவது வெறும் சிறப்புரையல்ல.

தொழிற் கட்சியிடம் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து, அக்கட்சிக்கு அரசாளும் வாய்ப்பினைக் கொடுத்த இங்கிலாந்து மக்களின் இதயம் உடைந்துவிடும் வகையில் தம் ஆட்சிமுறையால் பெரும் ஏமாற்றத்தைத் தந்துவிட்டார் அந்நாள் முதலமைச்சராக இருந்த இராமசே மாக்டொனால்ட். மக்கள் கொண்ட ஏமாற்றத்தைப் போக்கி, மீண்டும் குறிப்பிட்ட ஒரு கட்சியைச் சீர்திருத்திச் செம்மையாக்குவதும், பிறகு மறுமுறையும் அக்கட்சியைப் பதவியில் ஏற்றிவைப்பதும் எளிதான காரியமன்று. செயற்கரிய அப்பெரும் பணியைச் செய்து முடித்தப் பெருமை முழுவதும் அட்லியையே சார்ந்ததாகும் என இங்கிலாந்து வரலாறு கூறுகிறது.

அட்லி, பெரும் நிலக் கிழாரின் பிள்ளையாகப் பிறக்கவில்லை. இல்லாமையில் இடர்பட்டுக் கிடக்கும் ஏழைப் பாட்டாளியின் குடும்ப விளக்காகவும் பிறக்கவில்லை. தொழிலதிபரின் திருத்தவப் புதல்வரும் அல்ல அட்லி. நடுத்தர மரபில் பிறந்து, ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பெருஞ் செலவில் படித்துத் தேறியவராவார் அட்லி.

பாமர மக்களைக் கவரும் வகையிலான ஆவேசப் பேச்சு, அட்லியின் நாவிலிருந்து என்றும் எப்பொழுதும் எழுந்ததே கிடையாது. விண் பகட்டும் அவர் பேச்சில் இடம் பெறாது. பொருள் நிரம்பிய—பொறுப்பு மிக்கப் பேச்சாக அட்லியின் பேச்சு எப்பொழுதும் இருக்கும். கொள்கை உறுதிப்பாடு அவர் பேச்சிலும், செயலிலும் எந்நிலையிலும் ஊடுருவிக் கிடக்கும்.

இலண்டன் நகரக் கிழக்குக் கோடியில் தொழிலாள மக்கள் வதியும் சேரிப் பகுதியில், முதல் முதலாக அட்லி, சமூகப் பணியாளராகப் பொதுவாழ்வில் கால் வைத்தார். அத்துவக்கம், அவரை ஒரு சிறந்த சோஷலிஸ்டாக உருவாக்கி விட்டது.

இராணுவ சேவை அவர் அறிந்த ஒன்று. முதல் உலகப் போர்க்களத்தில் அவர் குண்டடியும் பட்டிருக்கிறார்.

முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அட்லி பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்று முதல் இன்றுவரை அவர் தொடர்ந்து உறுப்பினராகவே இருந்துவருகிறார்.

'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூடு விழாவை நான் செய்யத் துணியேன்' என வின்ஸ்டன் சர்ச்சில் துரை எக்காள மிட்டுக்கொண்டிருந்த அதே நேரத்தில்தான், இந்தியா, பாகிஸ்தான், பர்மா, சிலோன் ஆகிய நாடுகளுக்கு சுதந்திரம் வழங்க முயன்று, முடிவாக வெற்றியும் கண்டார் அட்லி. இப்பெருஞ்செயல் நம்மவர்களுக்கு நினைவிலிருக்கும் அளவில், இந்தியாவிற்கு எத்தகைய சுதந்திரம் வழங்குவது என்பதை ஆராய்ந்து அறிய ஏற்படுத்தப்பட்ட சைமன் குழுவில் அட்லியும் ஒரு உறுப்பினராவார் என்பது கருத்தில் இருக்க முடியாது.

போர்க் காலத்தில் இங்கிலாந்தில் அமைந்த தேசிய அமைச்சர் குழுவில், வின்ஸ்டன் சர்ச்சிலுடன் அட்லி பதவியிலமர்ந்து ஒத்துழைத்தது, உலகத்தவருக்கு ஒரு படிப்பினையாகும். அது போன்றே, போர் நின்றதும், மீண்டும் அமைதி காணப்பட்டதும், எந்த முதலமைச்சரிடம் ஒத்துழைத்தாரோ, அதே முதலமைச்சரை எதிர்த்து, அவர் கட்சியைப் பொதுத் தேர்தலில் புறமுதுகிடச் செய்து, அட்லி வெற்றி கண்டதும் சிறந்ததோர் படிப்பினையாகும்.

கொரியாவில் நடைபெற்ற கோர யுத்தம் உலகப் பெரும் போராக மூண்டுவிடக்கூடிய கட்டம் ஒன்று உருவெடுத்தது. அந்நிலையில் தயக்கம் துளியும் காட்டாது, அமெரிக்கா சென்று, கொரியாப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்காவை இணங்க வைத்ததின் மூலம், மூன்றாவது உலகப் போர் மூளாது தடுத்து நிறுத்திய பெருமை அட்லியையே சாரும். அவர் ஆட்சிக் காலத்தில் பல நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன இங்கிலாந்தில். அதன் பலனாக இங்கிலாந்துப் பாட்டாளி மக்கள் போர் விளைவித்தக் கேடுகளிலிருந்து மீட்சியடைந்து, கூடுமான வரை நல்வாழ்வு பெற்றனர் எனக் கூறுவது மிகையாகாது.

தொழிற் கட்சியின் தலைமைப் பதவியை அவர் துறந்த போதிலும், அவருடைய அனுபவமும், அறிவும் என்றென்றும் தொழிற் கட்சிக்கு பயன்பட்டு வரும் என்பதில் ஐயமில்லை. அவர் வாழ்க்கை வரலாறு நம் நாட்டு அரசியல் தலைவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையுமாக.

டால்மியா-ஜெயின் நிறுவனத்தில் இரு மத்திய அமைச்சர்கள் பங்கு!

பெரோஸ் காந்தி விளக்கத்தின் மீது மக்கள் சபையில் பரபரப்பு

நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் வாக்குறுதி

புதுடில்லி, டிச. 7—

மக்கள் சபையில், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் சட்டத் திருத்த மசோதா பற்றிய விவாதத்தில், டால்மியா நிறுவனத்தின் தவறான நடவடிக்கைகள் பற்றி உ. பி. காங்கிரஸ் உறுப்பினர் பெரோஸ் காந்தி குறிப்பிட்டிருந்த குற்றச்சாட்டுக்களை முன்னைய இதழில் வெளியிட்டிருந்தோம். இது குறித்து இன்று சபையில் மேலும் நடைபெற்ற விவாதங்களும் அமைச்சர் தந்த பதிலும் இங்கு தரப்படுகிறது:—

'டால்மியா நிறுவனம் குறித்து பெரோஸ் காந்தி குறிப்பிட்டவைகள் அனைத்தும் உண்மையல்ல; அவைகள் நடைபெற்றிருக்க முடியாது,"

என்று, பம்பாயைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர் துளசிதாஸ் என்பார் குறிப்பிட்டார்.

உடனே, பகவத் ஷா ஆசாத் என்பவரும், மற்றும் சில உறுப்பினர்களும் 'ஒருவேளை, அது துளசிதாஸ் அவர்களுடைய சொந்தக் கருத்தாக வேண்டுமானால் இருக்கலாம்' என்று கூறினர்.

மறுபடியும் அந்த சுயேச்சை உறுப்பினர் எழுந்து, 'இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் நிதி அனைத்தும் மிகப் பத்திரமாகத்தான் வைக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனால், இத்தகு சமுதாயத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் ஒரு சிறு அளவு குற்றத்தில் ஈடுபட்டுவிட்டதினாலேயே இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களிலுள்ள எல்லாருமே மோசமானவர்கள் என்று கூறிவிட முடியாது; எனவே இத்தொழில் தேசீயமயமாக்கப்பட வேண்டும்," என்று கூறினார்.

பஞ்சாபைச் சேர்ந்த தக்கூர்தாஸ் பர்காவா என்ற காங்கிரஸ் உறுப்பினர், பெரோஸ் காந்தியின் கருத்துக்களை எதிர்த்துப் பேசுகையில், ஒரு தனிப்பட்ட மனிதனுடைய நடவடிக்கைகள் பற்றி, அத்தனிப்பட்டவர் சபையில் பதில் தரத்தக்க நிலையில் இல்லாதிருக்கிற போது, எப்படி சபை விவாதிக்க இயலும் என்று தமக்குத் தெரியவில்லை என்றார்.

உடனே பல உறுப்பினர்கள் அவருக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

பீகாரைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினரான பகவத் ஷா ஆசாத் என்பார், நிதி அமைச்சர் இந்த விஷயம் பற்றிக் குறிப்பிடும்போது, 'சர்க்காருடைய பரிசீலனையில் அது இருப்பதால் சபையில் சொல்ல முடியாது' என்று கூறுவது பொருந்தாது என்று கூறினார்.

இதையொட்டி, உறுப்பினர்களிடையே அமைதியின்மை நிலவியது.

உ. பி-யைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் ஷர்மா, 'சபை உறுப்பினர் ஒருவரது பேச்சுக்களின் மீது, மற்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதின் மூலம் நேரத்தைப் பாழ்படுத்துவது சரியல்ல' என்று குறிப்பிட்டு, ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

உதவி சபைத் தலைவர் குறிக்கிட்டு, நேற்றைய கூட்டத்தில் நடைபெற்றவைகளுக்காகத் தாம் வருந்துவதாயும், சபையில் நல்ல சூழ்நிலை நிலவியதால்தான் நெடு நேரம் பேச பெரோஸ் காந்தியைத் தாம் அனுமதித்ததாகவும், எனவே இனிமேல் இது பற்றித் திரும்பப் பேசுவதற்கு யாரையும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் கூறினார்.

விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசிய நிலவரி, பாதுகாப்புச் செலவு அமைச்சர் எம். சி. ஷா குறிப்பிட்டதாவது:—

"பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியைப் பொறுத்த இந்த விவகாரங்கள் எல்லாம் சென்ற 1952-ம் ஆண்டிலேயே சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அந்நிறுவனத்தின் 'ஆயுள் நிதி'யிலிருந்து, ரூ. 1,50,00,000 பெறுமான அளவிற்குச் சில சொத்துக்களை, நிறுவனத்தார் வாங்கியதாகச் சர்க்காருக்குத் தெரிந்தவுடன், நிறுவனத்தின் பொறுப்பு மிக்கவர்களுடன் சர்க்கார் கலந்து பேசிற்று; அப்போது, நிறுவனத்தின் பொறுப்பாளர்கள், அவ்வாறு செய்ததில் எந்தவிதமான சிவில் குற்றங்களோ, கிரிமினல் குற்றங்களோ கிடையாது என்று தெரிவித்தனர். எனவே, சட்டத் திருத்த மசோதா நிறைவேறும் வரையில் இப்பிரச்சினையில் அதற்கு மேற்கொண்டு எந்த நடவடிக்கையும்எடுக்கஇயலவில்லை. அதிலிருந்து, அந்தத்தொகையினை திரும்பப் பெறுவதில் பங்குதாரர்களுக்குச் சர்க்கார் பாதுகாப்பு அளித்து வந்துள்ளது.

"தவறான வழிகளில் பாரத் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ரூ- 2,20,00,000-த்திற்கு மூலதனமிட்ட செய்தி கிடைத்ததும், உடனே சர்க்கார் தீவிர சோதனைகளில் ஈடுபட்டனர்; அதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

தென்னாட்டிற்கு பெரிய சர்க்கார் அச்சகம்!

புதுடில்லி, டிச. 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தென்னாட்டில் ஒரு சர்க்கார் அச்சகம் ஒன்று நிறுவுவதற்கான ஏற்பாடுகள் பற்றி சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருக்கின்றனர் என்றும், அங்கு தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித்தருவது உட்பட அந்த அச்சகம் கட்டி முடிக்க ரூ. $1\frac{3}{4}$ கோடி மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் இராஜ்யங்கள் சபையில், தொழில், வீட்டு வசதி, விநியோக அமைச்சர் சர்தார் சுவரண்சிங் தெரிவித்திருக்கிறார்.

என்றாலும், எந்த இடத்தில் அமைப்பது என்பது குறித்து இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முடிவு செய்தது

புதுடில்லி, டிச. 9—

வெளிநாடுகளிலிருந்து இந்த ஆண்டில் சர்க்கரையை இறக்குமதி செய்வதில்லையென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம். நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்திருப்பதே இதற்குக் காரணமாம்!

50,000 கிராமங்களுக்கு 10,000 நிலையங்கள்

ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டதாம்

சென்னை, டிச. 9—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், சுமார் 50,000 - கிராமங்களில், 10,000 பெண்கள் நல நிலையங்கள் துவங்குவதற்கு, இந்திய சர்க்கார் ரூ. 10 கோடி ஒதுக்கியிருக்கிறதாம்.

சென்னை சர்க்கார் கோரிக்கை

டில்லி சர்க்கார் இணங்குமா?

சென்னை, டிச. 9—

சென்னை டிராம்வே தொழிலாளருக்குச் சேரவேண்டிய சுமார் ரூ. $8\frac{1}{2}$-இலட்சம் அவர்களுக்குக் கிடைப்பதற்காகத் தொழில் தகராறு சட்டத்தையாவது திருத்தி உதவி செய்ய வேண்டுமென்று இந்திய சர்க்காருக்கு சென்னை அரசாங்கம் எழுதியுள்ளதாம்.

ரூ. 20 கோடி செலவில் உருவாகும் கன ரக மின்சாரத் தொழிற்சாலை

திரு-கொச்சியில் நிறுவுவதற்குக் கோரிக்கை

இந்திய சர்க்காருக்குத் திட்டக் குழு சிபாரிசு

திருவனந்தபுரம், டிச. 9—

"திரு—கொச்சியில் வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக காலத்தில் அந்த மாநிலத்தின் தொழில்களில் கூடிய மட்டும் நிறைய மூலதனமிட வேண்டும்"

என்று திட்டக் குழு, மத்திய சர்க்கார் இலாகாக்களைக் கேட்டுக் கொண்டிருப்பதாகச் செய்தியொன்று கூறுகிறது.

"உத்தேசிக்கப்பட்டுள்ள கன ரக மின்சார சாதனத் தொழிற்சாலையை திரு—கொச்சியில் நிறுவ வேண்டுமென்று அம் மாநிலசர்க்கார் கோரியுள்ளனர்; அநேகமாக, இக்கோரிக்கையை உற்பத்தி இலாகா ஏற்றுக் கொள்ளக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது"

என்று, சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறியுள்ளாராம்.

இந்தக் கன ரக மின்சாரத் தொழிற்சாலைக்கு ரூ 20 கோடி செலவாகுமெனத் தெரிகிறது.

இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்ற நிலம், அதன் அலுவல்கள் பற்றித் தெரிவிக்குமாறு மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் உற்பத்தி இலாகா ஒரு வினாத் தாளை அனுப்பியுள்ளதாம். இறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படு முன்பு குறிப்பிட்ட இடங்களைப் பிரிட்டிஷ் நிபுணர்கள் பார்வையிடுவராம்.

சுமார் 5 ஆண்டுகளுக்குள் உற்பத்தியில் ஈடுபடக்கூடிய இந்தத் தொழிறசாலையில், மின்சார ஜெனரேட்டர்கள் போன்றவையும், இரயில்வேக்களுக்கான மின்சார சாதனங்களும் உற்பத்தி செய்யப்படக் கூடும்.

கொச்சியில், சிறிய கப்பல்கள் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், 'ஃபோர்ஜிங் பிராசஸிங்' தொழிற்சாலை ஒன்றை நிறுவ வேண்டுமென்றும், திரு—கொச்சி சர்க்கார் இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனராம்.

ஆல்வாயில் ரூ. 75 இலட்சம் செலவில் ஒரு 'டி. டி. டி.' தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்திய சர்க்கார் முன்னமேயே அனுமதியளித்துள்ளனர்; இந்தியாவிலேயே இரண்டாவதாக உள்ள இந்தத் தொழிற்சாலை அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் ஆரம்பமாகும்.

செய்திச் சுருள்

கட்டாய இந்தியை ரத்து செய்க!

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் செ. குழு முடிவுகள்

தமிழ் நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் செயற்குழுக் கூட்டம் 19-11-55-ல், சென்னை தங்கசாலை தெரு, எண். 366 இல் லத்தில் (கட்சிக் காரியாலயம்) பெடரேஷன் தலைவர் தோழர் எ. இரத்தினம் எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றது. செயற் குழுவில் தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தோழர்கள் வந்திருந்தனர். சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்றும், தேவிகுளம், பீர்மேடு தாலுக்காக்களைத் தாய்த் தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென வற்புறுத்தியும், இத் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைக்கப்படாவிட்டால் அதற்காக நடைபெறும் போராட்டங்களில் பெடரேஷன் கலந்துகொள்ளு மென்றும், இத்தாலுகாக்களை தமிழகத்துடன் இணைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளும் இயக்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த பொதுச் செயலாளர் தோழர் எம். கே. சாமிக்கு அதிகாரம் அளித்தும், தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் நடைபெறும் இழிவு ஒழிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும், இரயில்வே வேலைகளுக்கு மனுச் செய்து சேர்வோர் இனிமேல் இந்தி மொழி கண்டிப்பாகப் படித்திருக்கவேண்டும் என்று இரயில்வே அதிகாரிகள் வெளியிட்டிருக்கும் உத்தரவைக் கண்டித்தும், உடனடியாக அந்த முறையை ரத்து செய்துவிடும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மற்றும் 500-க்கு மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட ஒவ்வொரு ஊர்களிலும் ஆரம்பப் பள்ளி அமைக்கவேண்டுமென்று சர்க்கார் சட்டம் இருந்தும், விழுப்புரம் தாலுகா மரகதபுரம், ஈன்னாடு, வட ஆற்காடு மாவட்டம் காட்பாடி போன்ற இடங்களிலும், தமிழ் நாட்டின் மற்றும் பல இடங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கு உடனடியாக அங்கீகாரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கல்லூரி நாடகப் போட்டி

கோவை, நவ. 15— கோவை பீளமேடு கலைக் கல்லூரியின் சார்பில், தமிழ் நாடகப் போட்டி கடந்த இரு தினங்களாக நடைபெற்றது. போட்டியில் 6-கல்லூரிகள் கலந்து கொண்டன. சென்னை தமிழ்ப் பேராசிரியர் திரு. மீனாட்சிசுந்தரனார் தலைமை வகித்து வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கினர்.

நாடகத்தில், பி. எஸ். ஜி. கலைக் கல்லூரியினர் முதலிடம் பெற்றனர். கோவை பாலிடெக்னிக் கல்லூரியினர் இரண்டாவது இடம் பெற்றனர். பாலிடெக்னிக் கல்லூரித் தோழர் பி. அய்யாசாமி நடிப்பில் முதலிடம் பெற்றார். தோழர் பி. அய்யாசாமி, தி. மு. கழக இயக்கத்தவராவார். 1944-ம் ஆண்டில், அப்போது சென்னை கவர்னராக இருந்த ஆர்தர் ஹோப், இவரது நடிப்பை பாராட்டித் தங்கப் பதக்கம் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரியகுப்பம் - பகுத்தறிவு மன்றத் துவக்கம்

20—11—55 மாலை 5 மணிக்கு, பெரியகுப்பத்தில் மேற்படி மன்றத் துவக்க விழா நடைபெற்றது. பொ. நாராயணன், கோ. எத்திராசன் ஆகியவர்களைத் தலைவராகவும் துணைத் தலைவராகவும் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

மதுரை அறிவு வளர்ச்சி படிப்பகம்

19-11-55 இரவு 10 மணிக்கு, மதுரை ஆட்டுமந்தை பொட்டல் சந்தில் மீன் மார்க்கெட் அருகிலுள்ள மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் கே. ஆர். அனிபா தலைமையில் நடைபெற்றது. அதுபோது, படிப்பக வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தேவிகுளம் பீர்மேடு பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், மதுரை 4-வது வார்டில் மூடப்பட்டுக்கிடக்கும் குளிக்கும் அறைகளைத் திறந்துவிட வேண்டுமென்று நகரசபையைக் கேட்டுக்கொண்டும், பேராசிரியர் இருதயராஜ், திண்டுக்கல் எம். எஸ். பி. சோலை ஆகியோரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* * *

சொற் பயிற்சிக் கூட்டம்

23-11-55 இரவு 10 மணிக்கு, மேற்படி படிப்பகத்தில், தோழர் எஸ். பி. எஸ். அமீது தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், தோழர்கள் எ. எஸ். கலைசேகன், கே. ஆர். அனிபா ஆகியோர் 'உலக வரலாற்றில் நாம்' என்பது குறித்துப் பேசினர்.

திண்டுக்கல் — பேகம்பூர் 'வளரும் படிப்பகம்'

20—11—55-ல், படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழா சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. காலை 7-30 மணிக்கு ஏழைகட்குக் கஞ்சி வார்க்கப்பட்டது. மாலை 6 மணிக்கு திரு. கருமுத்து தி. சுந்தரம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனார், திரு. ஔவை துரைசாமி, ஜனாப் எம். எஸ். அப்துல்சத்தார், தோழர்கள் ஜி லாசரஸ், கே. கணேசன், ஏ. பால சுப்பிரமணியம், பி. சமதர்மம், எம். சுந்தரமூர்த்தி, எல். இப்ராஹிம்கான் ஆகியோர் பேசினர்.

திருமலாபுரம் (மதுரை மா.) சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகம்

17—11—55-ல், தோழர் எஸ். கே. சிக்கந்தர் தலைமையில் நடைபெற்ற படிப்பக உறுப்பினர்கள் கூட்டத்தின்போது, தோழர்கள் கா. பச்சையப்பன், கே. சவுந்திரராசன், வி. என். சுருளிவேல், கே.பி. சுப்பையா ஆகியோரை முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர்களாகவும், தோழர் வி. வீரபாண்டியனைப் பொருளாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருப்புத்தூர் — மூவேந்தர் கலை மன்றம்

23—11—55-ல், தலைவர் பி. இராமையா தலைமையில் நடைபெற்ற தேர்வு கூட்டத்தில், மன்றத் தலைவராகத் தோழர் பி. இராமையா தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு செயற் குழுவும் அமைக்கப்பட்டது.

குடந்தையில் — தோழர் எம். ஜி. இராமச்சந்திரன்

குடந்தை இளைஞர் தமிழ் மன்றத்திற்கு, 14—11—55 மாலை 6 மணிக்கு, நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் வருகை தந்தார். அவரை துவரங்குறிச்சி தி. மு. கழகத் தோழர்கள் வரவேற்று விருந்தளித்ததுடன் புகைப் படமும் எடுத்தனர். அவர் தோழர்கட்கு நன்றி கூறிப் பேசுகையில், கழக வளர்ச்சியில் அதிகக் கவனம் செலுத்தும்படி வேண்டிக்கொண்டார்.

'தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைக் களவாட மலையாளிகள் ஒன்றுபட்டுள்ளனர்'

'மலையாளப் பொதுவுடைமையினரும் துணை நிற்கின்றனர்'

'தமிழர்களுக்காக வாதிட டில்லியில் எவருமே இல்லை'

ராஜ்ய சபை உறுப்பினர் ரசாக் விளக்கம்

நாகர்கோயில், டிச. 8—

"தேவிகுளம், பீர்மேடு பற்றிப் புதுடில்லியில், திரு-கொச்சியைச் சேர்ந்தவர்கள் விஷமத்தனம் செய்து வருகிறார்கள். காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவன் நாயர், பொது நிறுவனக் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக வேலைசெய்து வருகிறார். தன்னுடைய மேலான பொறுப்பின் காரணமாக உள்ள செல்வாக்கை தேவிகுளம், பீர்மேடு விஷயத்தில் அவர் உபயோகித்து வருகிறார்; தேவிகுளம், பீர்மேடு மட்டுமல்ல—குழுவினர் தீர்ப்புச் செய்த ஐந்து தமிழ்த் தாலுகாக்களும் பிரிந்து போகக்கூடாத முறையில் நியாயபூர்வமான செயலுக்கு விரோதமாக அவர் நடந்துவருகிறார்."

"தேவிகுளம், பீர்மேடு 'முகவரி' மாறி கேரளாவுக்குப் போயிருக்கிறது; 'முகவரி'யாளர் கேரளத்தார் என்று நிலை நாட்ட வேண்டும்—என்று முயற்சிகள் செய்யப்படுகின்றன; அதற்கு வேண்டிய முறையில் மலையாளிகள் ஜாதி, அரசியல், கட்சிப் பாகுபாடின்றி, அதிகாரிகள்—அதிகாரிகள் அல்லாதவர் என்ற வேறுபாடின்றி டில்லியில் செயல்பட்டு வருகிறார்கள்; பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் மலையாளிகள் தங்கள் உத்தியோகத்திற்கு விரோதமாக நடந்துவருகிறார்கள்.

"கம்யூனிஸ்டுகளும் இதே முறையில் ஒரு படி முன்னே நிற்கிறார்கள். தங்கள் சொந்த அனுவங்களை முன்னிட்டு டில்லிக்கு வரும் மலையாளிகளைக் கம்யூனிஸ்டுகள் சந்தித்து, அந்த மலையாளிகளுக்கு இல்லாத ஒரு பிரதிநிதித்துவத்தைக் கொடுத்து (கேரள சமாஜம், மலையாள சமாஜம் பிரதிநிதிகள் போன்ற 'ஜோடனை' செய்து) பொறுப்பு வாய்ந்த பதவி வகித்துவரும் உள்நாட்டு மந்திரி போன்றவர்களைப் பார்த்து வரச்செய்து, தேவிகுளம், பீர்மேடு மலையாளிகளுக்கே சொந்தமென்று சொல்லும்படி முறைகேடான வழியில் நடந்துவருகின்றனர்—மும்முரமான முறையில் டில்லியில் இந்த வேலைகள் நடைபெறுகிறது.

"இதுபோன்ற 'குட்டு'களை வெளிப்படுத்த சமீப காலம்வரை தமிழர்கள் ஒருமுகமாகச் செயல்பட்டது இல்லை; தேவிகுளம், பீர்மேடு விஷயமாகத் 'தமிழர்கள்' என்ற முறையில் செயல்பட டில்லியில் எவருமே இல்லை."

இவ்வாறு, இராஜ்யசபை உறுப்பினரான ஏ. ஏ. ரசாக் எம்.பி., குறிப்பிட்டுள்ளார்.

குடியேற்றம் — பகுத்தறிவு இளைஞர் மன்றம்

16—11—45 இரவு 9 மணி அளவில், மன்றப் பொது உறுப்பினர்கள் கூட்டம் பிச்சனூர் ஆதிமூலசாமி மடத்தில் தோழர் ஆ. க. திலகன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் எ. வி. தம்பித்துரை, பி. ஜி. இராசன், எ. க. துரைசாமி, விசுவநாதன் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பரக் குழுச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

வடசென்னை — தாளமுத்து — நடராசன் முன்னேற்ற மன்றம்

27—11—55 மாலை 6 மணிக்கு, மன்றப் பணி மனையில், தோழர் எம். முனுசாமி தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில், தோழர்கள் மா. கனிச்செல்லன், சாமிநாதன், இளந்திருமாறன், ஏ. ஜே. இராபர்ட் ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

கோவை — மறுமலர்ச்சி மன்றத் துவக்க விழா

26—11—55 மாலை 6 மணிக்கு, கோவை ஆர். எஸ். புரம் இராமலிங்க ரோடு, 11/45 எண். இல்லத்தில், தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களால் மேற்படி மன்றம் திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், கோவைச் செழியன், சி. டி. தண்டபாணி, வரதராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். விழாவிற்குத் தோழர் மே. அ. இரத்தினம் தலைமை தாங்கினர்.

எஸ். ஆர். எம். யூ. சேலம் கிளை

1—12—55 மாலை சேலம் கிளையின் நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் டி. எஸ். வீராசாமி முன்னிலையில் நடைபெற்றபோது, கிளைத் தலைவர் வேறொரு இடத்திற்கு மாற்றப்பட்டமையால், தற்போதைய பொருளாளர் தோழர் தங்கராசுவை தற்காலிகமாகத் தலைவராகத் தேர்ந்தெடுத்தும், தோழர் முனுசாமி அவர்களைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தும், தோழர் லோகநாதன் கிளையின் சம்மதமின்றி தன் இச்சையாக அண்மையில் நடந்த மண்டபம் கூட்டத்தில் கலந்துகொண்டதால் அவரை நீக்கிவிட்டு, தோழர் வி.பி. ராமசாமி என்பவரை மத்தியச் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்யப்பட்டது.

ஸ்ரீவைகுண்டம் திராவிட இளைஞர் முன்னணி

27—11—55ல் இவ்வூர் ஆற்று மணலில் தோழர் எ. தங்கப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், திராவிட இளைஞர் முன்னணி அமைக்கப்பட்டது. 20-12-55ல் துவக்க விழாவை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. தோழர் ஆ. அண்ணாமலையைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஐ. நா. சிறுவர் தினம்

13—11—55 காலை 9 மணிக்கு. சென்னை சூளைமேடுள்ள இந்து யூனியன் கமிட்டி ஆரம்பப் பள்ளியில் நகர இளைஞர் கழகத்தின் சார்பில், ஐ. நா. சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. ஏராளமான மாணவர்களும், பெற்றோர்களும் வந்திருந்தனர். விழாவிற்குத் திரு. எம் கே. பதி தலைமை தாங்கினார். திரு. எஸ். எஸ். ராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். திரு. பி. பாலகோபால் சொற்பொழிவாற்றினார்.

மாயூரம் வேலாயுதம் மன்றம்

19—11—55 மாலை 6 மணிக்கு, மன்றக் கட்டிடத்தில் தோழர் கி. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்ற மன்றக் கட்டிடக் குழுக் கூட்டத்தில், கட்டிட நிதிக்கான தொகையை ஜனவரி மாத இறுதிக்குள் வசூல் செய்து கட்டிட உரிமையாளருக்குச் செலுத்துவது என்றும், வசூல் செய்வதற்காக ரசீது புத்தகங்கள் பெற்றுச் சென்றிருக்கும் தோழர்கள் இதுவரை வசூலான தொகையையும் ரசீது புத்தகத்தையும் 10—12—'55-க்குள் குழுவினரிடம் சேர்த்துவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

முன்னுள் மரமேறும் தொழிலாளர் சங்கம்

27, 30—11—55 ஆகிய இரு நாட்களிலும், மேற்படி சங்க இல்லத்தில் (2/150 பார்பர் பிரிட்ஜ் ரோடு, கிருஷ்ணம்பேட்டை, சென்னை, 5) நடைபெற்ற செயற்குழுக் கூட்டங்களில், தலைவராக திரு. கே. வி. கந்தசாமி தலைவராகவும், திரு. எம். ஏ கரீம் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை தி. மா. மு. கழகம் 4-வது ஆண்டு துவக்கவிழா

12—11—55 அன்று தோழர் இளமாறன் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில், தோழர்கள் ப. நெடுமாறன், எஸ். முத்து ஆகியோரைப் பாராட்டியும் கழகத்தின் கொள்கையை விளக்கியும் தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், மா. பாண்டியன், சொக்கலிங்கம், கு. கிருஷ்ணன், தேனிநாதன் ஆகியோர் பேசினர். தோழர் சுந்தரம் ஆண்டறிக்கை படித்தார். தோழர் தேனிநாதன் நன்றி கூறினர். பாராட்டிற்குத் தோழர்கள் ப. நெடுமாறன், எஸ். முத்து ஆகியோர் நன்றி தெரிவித்துப் பேசினர்.

கூட்ட இறுதியில் பேராசிரியர் இருதயராச இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில், 2 நிமிடங்கள் எழுந்து நின்று மரியாதை செய்யப்பட்டது. பின்னர், மதுரைக்கு விரைவில் பல்கலைக் கழகச் சிறப்பு வகுப்புகளுக்கு ஒப்பம் தரவேண்டுமென சென்னை பல்கலைக் கழகத்தாரைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ரூ. 600 கோடி ஒதுக்க வற்புறுத்துவராம்!

புதுடில்லி, டிச. 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கல்விக்கென ரூ. 600-கோடி ஒதுக்கவேண்டுமென்று முதன் முதலில் கேட்டுக்கொண்ட கோரிக்கையை மீண்டும் திட்டக் குழுவினரிடம் வற்புறுத்துவது என்று, பாராளு மன்றக் கல்விக் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர்.

ஆசிரியர்கள் ஊதியத்தை அதிகரிப்பதற்கென மேலும் ரூ. 60-கோடி அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளனராம்.

'வாழத் தெரிந்தவர்கள்' நாடகம்

5—12—55 மாலை 6 மணிக்கு, தாத்தையங்கார்பேட்டை அழகிரி நாடக மன்றத்தாரால் 'வாழத் தெரிந்தவர்கள்' என்ற நாடகப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்நாடகத்தை பொங்கல் திருநாளன்று நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

'தாழ்த்தப்பட்டோரின் சிக்கல்கள் தீர மனப்பாங்கில் மாற்றம் வேண்டும்'

மத்திய அமைச்சர் ஜெகஜீவன்ராம் கருத்து

மைசூர்—

" தாழ்த்தப்பட்டவர்களுடைய சிக்கல்கள் எல்லாம் இதரர்களுடையதைப் போன்றவையே! நாடு முழுவதும் ஏழ்மை இருக்கிறது—அறியாமை நிலவுகிறது—பிறரை நம்பி வாழ வேண்டியிருக்கிறது—கோவிலுக்குள் நுழைகிற சிக்கல்கூட இருக்கிறது.

" ஒரு நோய் என்று நான் கருதுகிற 'மனப்பாங்கு,' சாதி இந்துக்கள் என்போரிடமும், தாழ்த்தப்பட்டோரிடமும் இருக்கிறது.

" சாதி இந்துக்கள், தாங்கள் 'உயர்பிறப்பு' என்றும், தங்களைப் போன்ற 'சம நிலை' தாழ்த்தப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடாது என்றும் எண்ணுகின்றனர்.

" அதேபோல தாழ்த்தப்பட்டவர்கள், தாங்கள் 'கீழ் மக்கள்' என்றும், பிறசாதி இந்துக்களைப்போல 'சமநிலை'யில் வாழக்கூடாது என்றும் நினைக்கிறார்கள்.

'இந்த இருசாராரும், தங்களின் இத்தகு எண்ணங்களை மாற்றிக்கொண்டாலன்றி நிலைமைகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படாது,"

என்று, கடந்த கிழமையில் மத்திய சர்க்கார் செய்திப் போக்கு-வரத்து மந்திரி ஜெகஜீவன்ராம், தாழ்த்தப்பட்டோர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

" மத்திய சர்க்காரின் முயற்சிகளின் விளைவாகக் கல்லூரிகளில் பயிலும் எந்த ஒரு தாழ்த்தப்பட்ட மாணவரும் உபகாரச் சம்பளம் பெறாமல் இல்லை; என்றாலும், பள்ளிகளில் பல ஆயிரம் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் மத்திய சர்க்கார் உதவி செய்ய இயலவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது மாநில சர்க்காரின் பொறுப்பாகும்.

" சர்க்கார் வந்து உதவி செய்யும் வரை தாழ்த்தப்பட்டவர்கள் காத்துக் கொண்டிருக்கக் கூடாது. தங்களுக்குள்ளாகவே நிதி திரட்டிப் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும்.

" சிகரெட் பிடித்தல், வெற்றிலை சுவைத்தல் போன்ற இதர ஆடம்பரப் பொருள்கள் உபயோகிப்பதைக் கைவிட்டு, அதனால் மிச்சமாகும் பொருளைக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்.

" வேலையில்லாமை என்பது, தாழ்த்தப்பட்டவர்களிடம் மட்டுமல்ல—நாடு முழுவதும்தான் நிலவிக் கொண்டிருக்கிறது. நிலத்தைப் பிரித்துத் தருவது, குடிசைத் தொழில்களைப் புதுப்பிப்பது, வேலைகளுக்கான பாதுகாப்புத் தருவது போன்றவை மேற்கொள்ளப்பட்டாலன்றி, இந்தச் சிக்கல் தீர்க்கப் பட முடியும் என்று நான் நினைக்கவில்லை."

பாலாற்றுத் தண்ணீர் தகராறு

பேச்சுவார்த்தையில் உடன்பாடு காணமுடியவில்லை ?

சென்னை, டிச. 9—

பாலாற்று நீரைப் பகிர்ந்து கொள்ளும் தகராறு பற்றி சென்னை—மைசூர் மாநில அதிகாரிகளிடை இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் எவ்வித உடன்பாடோ, முடிவோ ஏற்படவில்லையாம்; மீண்டும் பிப்ரவரி மாதத்தில், இருதரப்பினரும் பெங்களூரில் சந்தித்துப் பேசலாம் என ஒப்புக்கொள்ளப்பட்டதாம்.

சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறதாம்!

புதுடில்லி, டிச. 9—

" கைத்தொழில்களின் நிர்வாகத்தில் முதலாளிகள்—தொழிலாளர்கள் இருவரும் பங்கு பெறும் பிரச்சினை, இன்னும் இந்திய சர்க்கார் ஆலோசனையில் இருந்து வருகிறது," என்று, மக்கள் சபையில் தொழிலாளர் இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

பிரி-கிழக்கு ஆப்பிக்காவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இயற்கையாகவே ஒன்றுபடுத்தியிருக்கிறது.

" ஆப்பிரிக்காவுடன் நமது உறவு பல நூற்றாண்டுகளாக உள்ளதாம். உகந்தாவில், சமீப காலத்தில் மொம்பா எனும் இடத்திலிருந்து சம்பலா எனும் இடம் வரைக்கும் இரயில் பாதை அமைக்க நாம் உதவியிருக்கிறோம். கடந்த மூன்று தலைமுறைகளில் இரண்டு தடவைகள் நமது துருப்புகள், இந்த ஆப்பிரிக்க நாடுகளை வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகாமல் பாதுகாத்திருக்கின்றன.

" பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவின் பல நாடுகளுடைய பொருளாதார, வர்த்தக முன்னேற்றத்தில் இந்தியர்கள் பெரும் பங்கு ஏற்றிருக்கிறார்கள். உறுதியான, வளமிக்க, ஒற்றுமையான ஒரு நாட்டினை உருவாக்குவதில் இந்தியர்கள் இன்னும் பெரியதோர் பங்கேற்றாக வேண்டும்.

" ஆப்பிரிக்காவின் எதிர்காலத்தில், இந்தியர்கள் எத்தனை நம்பிக்கைக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு, அவர்கள் அங்கு விதைத்திருக்கும் முதலீடுகளே சான்று.

" இந்தியாவில் தங்கள் பிடிப்பு இழந்துவிட்ட இந்தியர்கள், கிழக்கு ஆப்பிரிக்காவில் காலூன்றி வருகின்றனர்."

புயல், வெள்ள நிவாரண நிதி

நடிக—நடிகையர் உதவி

சென்னை, டிச 9—

கடும்புயல், பேய் மழை இவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடித் தருவதில் சென்னை சினிமா நடிகர்களும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

நிதி வசூல் செய்வதற்கென தோழர்கள் நாகையா, என். எஸ். கிருஷ்ணன், டி. கே. சண்முகம் எம். ஜி. இராமச்சந்திரன், சகஸ்ரநாமம், டி. ஏ. மதுரம், சிவதாணு ஆகியோர்கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது—கலைவாணர் வீட்டில் நடந்த அவசரக் கூட்டம் ஒன்றில்.

தோழர் டி. எஸ். பாலையா ரூ 5,001, தோழியர் டி. ஆர். இராஜகுமாரி ரூ. 1,001, என். எஸ். கிருஷ்ணன்—மதுரம் ரூ. 1001 எம். ஜி இராமச்சந்திரன் ரூ 1 000, சிவாஜி-கணேசன் 1,001, டி. கே. எஸ். சகோதரர்கள் ரூ. 1,001—என்று பலரும் பணஉதவி செய்ய முன்வந்திருக்கின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

வண்ணை—பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்)

11—12—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. எம். முத்தையா

பேசுவோர்:

கண்ணதாசன்

வி. முனுசாமி எம். சி.

ஆடலழகன்

வெற்றிவீரன்

—சென்னை 4-வது வட்ட தி.மு.க.

★

வாணியம்பாடி

வாரச் சந்தையில்

11—12—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. வடிவேல்

பேசுபவர் :

மு. கருணாநிதி

திருச்சி மாவட்டத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

" பொதுச் செயலாளர் அறிக்கைக் கிணங்க நமது மாவட்டத்தில் உடனடியாக உறுப்பினர்கள் சேர்க்கும் முயற்சியில் கிளைக் கழகங்கள் ஈடுபட வேண்டுகிறேன். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கிளைகள், இன்னும் அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டுகிறேன். தங்களுக்கு எவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்கும் படிவங்கள் தேவைப்படுகிறது என்பதை உடனடியாக மாவட்டக் கழகத்துக்கு எழுதவும். புதிதாக ஆரம்பிக்கும் கிளைகள் தங்கள் கிராமத்துக்கு அருகாமையிலுள்ள கிளைக் கழகச் செயலாளரிடமோ அல்லது மாவட்டப் பிரதிநிதியிடமோ,' அல்லது பொதுக் குழு உறுப்பினரிடமோ அனுமதி பெறாமல் எழுதுபவர்களுக்கு படிவங்கள் அனுப்பப்படமாட்டாது,"

என்று, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் திருச்சி மாவட்ட தி. மு. கிளைக் கழகச் செயலாளர்கட்கும், அனுதாபிகட்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

11—12—55 காலை 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (எண் 4, நமசிவாய முதலி தெரு, திருவல்லிக்கேணி) தோழர் சி. ஏ. முகிலன் தலைமையில் நடைபெறும். 'அருள் நெறியும்-அறிவியக்கமும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் நீல நாராயணன், பு. அரங்கசாமி, மற்றும் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11-12-55 காலை 9-30 மணிக்கு, திரு. வி. க. மறுமலர்ச்சி மன்ற மனையில் (எண் 32, ராமானுசம் தோட்டத் தெரு, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை) தோழர் எஸ். டி. மாதவன் தலைமையில் நடைபெறும். 'கடவுளும்-மனிதனும்' எனும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

11—12—55 காலை 10 மணிக்கு சென்னை — சிந்தாதிரிப்பேட்டை' எண் 126, சாமி நாய்க்கன் தெரு, கலைக்கதிர்கழகத்தில்,தோழர் சோ சென்னையம்பதி தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

11-12-55 காலை 8-30 மணிக்கு சென்னை-இராயபுரத்திலுள்ள வட சென்னை தாளமுத்து-நடராசன் முன்னேற்ற மன்றப் பணிமனையில் தோழர் தாஸ் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் என்.வி. மதிவண்ணன், இளந்திருமாறன் பேசுவர்,

டால்மியா—ஜெயின் ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து நாட்களுக்குள்ளாகவே, அந்நிறுவனத்தின் பல பங்குதாரர்களுடைய தொகையில் குறைபாடுகள் இருப்பதைக் கண்டறிந்தனர். உடனே, நிறுவன அதிபர் இராமகிருஷ்ண டால்மியாமீதும், நிறுவன முக்கிய அதிகாரி மீதும் நடவடிக்கை எடுக்க சர்க்கார் திட்டமிட்டு, டால்மியாவைக் கைது செய்தது; அதைத் தொடர்ந்து; டால்மியாவுடன் சம்பந்தப்பட்ட மற்ற 15 பேருக்கும் தடையுத்தரவு விதித்து ரூ. 1,80,00,000-த்தையும் சர்க்கார் மீட்டது.

" முடங்கிக் கிடந்த இந்தப் பணம் திரும்ப மீட்கப்பட்டுவிட்டது என்ற காரணத்திற்காக, டால்மியா மீதுள்ள நடவடிக்கைகள் கைவிடப்படலாம் என்று உறுப்பினர்கள் நினைக்கலாம். ஆனால், அதிதீவிரமான போலீஸ் நடவடிக்கைகளும், உளவு பார்த்தல்களும் நடைபெற்று வருகின்றன; இந்த விஷயம் மிகத் தீவிரமான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்றும் உறுதி கூறுகிறேன்.

" இத்தகு நிறுவனங்களையெல்லாம் தேசிய மயமாக்குவது பற்றிய பிரச்சினை, சர்க்காரின் பரிசீலனையில் இருந்துதான் வருகிறது.

" டால்மியா—ஜெயின் நிறுவன ஊழல்களை விசாரிக்க அதிகாரம் பெற்ற நீதிக் குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், டால்மியா—ஜெயின் நிறுவனத்தின் பல்வேறு கிளைகளிலிருந்தும் வேண்டிய அளவிற்கு இது விஷயத்தில் நிதி அமைச்சர் ஆதாரங்கள் திரட்டி வைத்திருக்கிறார்; எனவே அவர் இதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறார்; அவசியமெனக் கருதினால், அவர், விசாரணைக் குழுவை நியமிப்பார்."

' டால்மியா —ஜெயின் நிறுவன டிரஸ்டிகளைச் சேர்ந்த இரண்டு பொறுப்பாளர்கள் பெயரை நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்க பெரோஸ் காந்தி மறுத்தது நினைவிருக்கலாம்.

இன்று விவாதத்திற்குப் பதில் கூறிய அமைச்சர் ஷாவே, அவ்விருவரது பெயரையும் தெரிவித்திருக்கிறார்! தமக்கு இதுவிபரம் தெரிந்திருப்பதாலும், சபையில் அதனைத் தாம் தெரிவிக்காவிட்டால் சந்தேகத்திற்கிடமாகுமென நினைத்ததாலும், அத்தகு சந்தேகத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதற்காகவும் தான் அவ்விருவரது பெயரையும் வெளிப்படுத்துவதாகக் கூறி, இப்போதுள்ள மத்திய அமைச்சர்களான ஜெகஜீவன்ராம், சத்தியநாராயண சின்ஹா ஆகியோரைக் குறிப்பிட்டிருக்கிறார். அவ்விருவரும் 1940-ல் 'டிரஸ்டி'களாக நியமிக்கப்பட்டனர் என்றும், 1952-ல் தங்கள் பதவிகளை இராஜினாமா செய்தனர் என்றும், அவர்கள் டிரஸ்டிகளாக இருந்தபோதிலும்கூட எந்த டிரஸ்டிகள் கூட்டத்திலும் கலந்துகொள்ளாததுடன், அவர்களுக்கு நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்பதே தெரியாதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அமைச்சர் பேசி முடிந்ததும் பல உறுப்பினர்கள் எழுந்து கேள்வி கேட்டனர்.

மோகன்லால் என்பார், 'சென்ற 1953-ம் ஆண்டில் கம்பெனியின் செக்கியூரிட்டிகள் சரிவர இல்லாமல் ஊழல் நிறைந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா?' என்று கேட்டபோது அமைச்சர், தமக்கு அதுகுறித்து எந்தவித விபரமும் தெரியாது என்றார்.

ஏ எம். தாமஸ் :— " அண்மையில் நிதி அமைச்சர் 'இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களை தேசிய மயமாக்கும் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் எதும் தரப்படவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால், அமைச்சர் ஷா, 'இந்தப் பிரச்சினையை சர்க்கார் அதிக மும்முரமாகப் பரிசீலிக்கிறது! என்று குறிப்பிட்டிருக்கிறார். இவற்றுள் எது சரி?" என்று கேட்டார்.

அமைச்சர் ஷா :— " இந்தப் பிரச்சினை சர்க்காரின் தீவிரப் பரிசீலனையில் இருந்துவருகிறது என்பதைக் கடந்த சில மாதங்களில் பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறேன். இதுபற்றி சர்க்கார் இன்னும் நன்றாக ஆலோசனை செய்துதான் 'வருகின்றனர்,' என்று குறிப்பிட்டார்.

மற்றும் சில கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில், 'டைம்ஸ் ஆப் இந்தியா' நிறுவனத்தார் டால்மியா நிறுவனத்தாருக்குக் கொடுக்கவேண்டிய கடன் தொகை ரூ 103 லட்சமும் அடைக்கப்படும் வரையில், அந்நிறுவனத்தின் கட்டிடமும், இயந்திர சாமான்களும், டால்மியா நிறுவனத்திற்கு அடமானமாக இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இறுதியில், சபை, இத்திருத்த மசோதாவினை ஒருசில திருத்தங்களுடன் நிறைவேற்றியிருக்கிறது.

திருவள்ளுவர் இளைஞர்கழகம்

11—12—55 காலை 10 மணியளவுக்கு சென்னை மண்ணடி திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில், இராசமன்னார் பாடசாலையில் திரு முருகேசனார் 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அதிகாரத்திற்கு விளக்கவுரையாற்றுவார்

புயல் நிவாரண நிதி திரட்டல்

11—12—55 காலை 7 மணி முதல், சென்னை 43-வது வட்ட தி மு கழகச்சார்பில்,கழகத்தோழர்கள் வட்டத்தில் எல்லா பாகங்களுக்கும் சென்று புயல் நிவாரண நிதி திரட்டுவார்கள்.

கே.எஸ்.பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக உறுப்பினர்களுக்கு

11—12—55 இரவு 9 மணிக்கு, சென்னை வண்ணை கே. எஸ். பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பக மணிமனையில், தோழர் பி. எம். இராமையா தலைமையில் அவசரச் செயர்குழுக் கூட்டம்நடைபெறும்.

பெங்களூர் திராவிட மாணவர் முன்னேற்றக்கழக அமைப்பு

பெங்களூர் மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 11-12-55 காலை 10 மணிக்கு, பெங்களூர் கப்பன் பார்க் மியூசியத்திற்கருகில் திறந்த வெளியில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெறும் தோழர் சி. பி. சிற்றரசு கழகத்தைத் துவக்கிவைப்பார். பெங்களூரில் உள்ள எல்லா கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,

இந்தியப் பேரரசின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் 134 முறைகள் காலம் கடந்து சென்றிருக்கிறது.

இந்தத் தகவலை உதவி இரயில்வே இலாகா மந்திரி ஓ. வி. அளகேசன், மக்கள் சபையில் தோழர் வீராசாமியின் கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

இரயில்வே நிர்வாகத்தினர், குறித்த காலத்தில் இரயில்களை ஓட்டுவது குறித்து தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ,